# Chapter – 2

# நீர்

---

I. சரியான விடையைத் தேர்ந்தெடு.

**Question 1.**
கீழ்க்கண்ட நுண்ணுயிரிகளில் எவை நீரால் பரவும் நோய்களைத் தோற்றுவிக்கின்றன?
அ. பாக்டீரியா
ஆ. வைரஸ்
இ. புரோட்டோசோவா
ஈ. அனைத்தும்

**விடை:**
ஈ. அனைத்தும்

**Question 2.**
___________ இல் நீரானது அதிக அளவில் நீராவியாகவும், மேகங்களாகவும் காணப்படுகிறது.
அ. வானம்
ஆ. பூமி
இ. வளி மண்டலம்
ஈ. மழை

**விடை:**
இ. வளி மண்டலம்

**Question 3.**
___________ நீரில் மாசுக்கள் இருக்காது.
அ. கடல்
ஆ. கிணற்று
இ. ஆற்று
ஈ. நிலத்தடி
**விடை:**
ஈ. நிலத்தடி

**Question 4.**
__________ நீர் கடலிலும் பெருங்கடலிலும் காணப்படுகிறது.
அ. 97%
ஆ. 87%
இ. 47%
ஈ. 77.5%

**விடை:**
அ. 97%

**Question 5.**
_________ என்பது கடல் நீரை தூய நீராக மாற்றும் – செயற்கையான செயல்பாடாகும்.
அ. பின்னக் காய்ச்சி வடித்தல்
ஆ. தெளிய வைத்து இறுத்தல்
இ. தலைகீழ் சவ்வூடு பரவல்
ஈ. உப்புத் தன்மை நீக்குதல்

**விடை:**
ஈ. உப்புத் தன்மை நீக்குதல்

II. கோடிட்ட இடத்தை நிரப்புக.

**Question 1.**
நிலத்தடி நீர் ____________ வடிவில் புவியின் மேற்பரப்பிற்கு வெளியே வரும்.

**விடை:**
ஊற்று நீர்

**Question 2.**
நீரானது சூரிய வெப்பத்தினால் ஆவியாக மாறுவதற்கு ____________ என்று பெயர்.

**விடை:**
ஆவியாதல்

**Question 3.**
மழை நீரால் உருவாக்கப்பட்ட நீரோடை மற்றும் ____________ ஆகியவை ஒன்றிணைந்து ஆறாக உருவாகின்றன.

**விடை:**
ஊற்று நீர்

**Question 4.**
மழை நீரைச் சேகரித்து அதைச் சேமிக்கும் முறைக்கு _____________ என்று பெயர்.

**விடை:**
மழைநீர் சேகரிப்பு

**Question 5.**
காலரா நோயைத் தோற்றுவிப்பது _____________.

**விடை:**
விப்ரியோ காலரே பாக்டீரியா

III. பொருத்துக.

1. எண்ணெய்க்கசிவு – மேகம்
2. நீர்த் தேக்கம் – தாவர வளர்ச்சி
3. பின்னக்காய்ச்சி வடித்தல் – கடல் வாழ் உயிரிகளை மாசுபடுத்துதல்
4. மழை நீர் சேகரிப்பு – இன்புளூயன்சா வைரஸ்
5. பன்றிக் காய்ச்சல் – அணைக்கட்டு

**விடை:**
1. எண்ணெய்க்கசிவு – கடல் வாழ் உயிரிகளை மாசுபடுத்துதல்
2. நீர்த் தேக்கம் – அணைக்கட்டு
3. பின்னக்காய்ச்சி வடித்தல் – மேகம்
4. மழை நீர் சேகரிப்பு – தாவர வளர்ச்சி
5. பன்றிக் காய்ச்சல் – இன்புளூயன்சா வைரஸ்

IV. சுருக்கமாக விடையளி.

**Question 1.**
நீரின் மூலங்களை எழுதுக.

**விடை:**
ஆறுகள், ஓடைகள், நிலத்தடி நீர், மழைநீர், உருகிய , பனிப்பாறை ஆகியவை தனித்தோ அல்லது சேர்ந்தோ ஏரிகள், – நீர்த்தேக்கங்கள் மற்றும் குட்டையில் காணப்படும் நீரின் – ஆதாரங்களாக உள்ளன.

**Question 2.**
உப்பு நீக்கல் என்றால் என்ன?

**விடை:**
கடல்நீரைக் குடிநீராக்குதல் என்பது கடல்நீரில் உள்ள உப்பை' அகற்றி தூய நீராக மாற்றும் செயற்கையான செயல்முறையாகும். கடல்நீரைக் குடிநீராக்குவதற்கு காய்ச்சி – வடித்தல், தலைகீழ் சவ்வூடு பரவல் ஆகிய முறைகள் பயன்படுத்தப்படுகின்றன.

**Question 3.**
நீர்சுழற்சியின் படிநிலைகள் யாவை?

**விடை:**

1. ஆவியாதல்
2. ஆவி சுருங்குதல்
3. வீழ்ப்படிவாதல்
4. கடலை நோக்கிச் செல்லுதல்

**Question 4.**
நீர்த்தேக்கம் என்றால் என்ன?

**விடை:**
ஆற்றின் குறுக்காக அணை கட்டப்படுவதன் மூலம் மனிதனால் உருவாக்கப்பட்ட ஏரிகள் தோன்றுகின்றன. இவை நீர்தேக்கங்கள் என்றும் அழைக்கப்படுகின்றன.

**Question 5.**
டெங்கு காய்ச்சலை எவ்வாறு தவிர்க்கலாம்?

**விடை:**
→ வீட்டைச் சுற்றிலும் நீர் தேங்காமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.
→ அதிகாலை மற்றும் மாலை வேலைகளில் கதவைப் பூட்டி வைத்திருக்க வேண்டும்.
→ வீட்டைச்சுற்றிலும் கொசுக்களைத் தடுக்கும் திரவத்தைத் தெளிக்க வேண்டும்.
→ உடல் பகுதிகளை மூடியிருக்கும் வகையில் ஆடை அணிய வேண்டும்.

V. விரிவாக விடையளி.

**Question 1.**
மழை நீர் சேகரிப்பின் நன்மைகள் யாவை?

**விடை:**
மழை நீர் சேகரிப்பின் நன்மைகள் :
→ நகரங்களில் வெள்ளம் ஏற்படுவதைத் தவிர்க்கிறது.
→ புவியின் மேற்புற மண் அரிக்கப்படுவதைத் தவிர்க்கிறது.
→ தாவர வளர்ச்சியை அதிகரிக்கிறது.
→ நிலத்தடி நீர் மட்டத்தை உயர்த்துகிறது.
→ நிலத்தடி நீர்மட்டம் பாதுகாக்கப்படுகிறது.

**Question 2.**
நீர் மூலம் பரவும் நோய்களை எவ்வாறு தவிர்க்கலாம்?

**விடை:**
→ முறையான தன் சுத்தம் பேணுதல் வேண்டும். சுகாதாரத்தை மேம்படுத்த வேண்டும்.
→ குளோரின் கலந்த, கொதிக்க வைக்கப்பட்ட நீரையே பருக வேண்டும்.
→ நன்கு கொதிக்க வைத்த அல்லது பதப்படுத்தப்பட்ட பாலைக் குடிக்க வேண்டும்.
→ தொற்று நோய் பரப்பும் கழிவுகளை முறையாக அகற்ற வேண்டும்.